# தமிழ் முதியோருக்கான அறிவிப்புகள்

ஒவ்வொரு செவ்வாயும் தமிழரின் கூட்டம் காலை 9:00 இல் இருந்து மாலை 4:30 மணி வரை நடைபெறும். ஒவ்வொரு புதனும் காலை 12:30 இல் இருந்து மாலை 3:30 மணிவரை நடைபெறும்.

## ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும்

9:15–10:15 & 1:30–2:30 கணணி (பேஸிக்)



10:15 – 11.15 யோகாசனம்



11:30 – 12.30 ஆங்கில வகுப்பு

12:30 மதிய உணவு



பொழுது போக்கு நிகழ்ச்சிகளான **சீட்டாட்டம்**, கரம், பிங்கோ போன்ற விளையாட்டுகளை நீங்கள் சக அங்கத்தவர்களுடன் சேர்ந்து விளையாடலாம்.

## ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

1:30 - 3:00 எழுத்தாளர் குழு
1:30 - 3:00 கணணி (அட்வான்ஸ்)

விசேட நிகழ்ச்சிகளுக்கான நடனம், பாட்டு, நாடகம் போன்றவற்றிற்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

- சீன குழுவினரால் நடாத்தப்படும் நிரை நடன வகுப்பு **(Line Dancing)** சித்திரை மாதம் 13ம் திகதி ஆரம்பமாக உள்ளது. அதில் பங்குபற்ற விரும்புவோர் உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

# அறிவிப்புகள்

பங்குனி 27: "பிறந்த நாள் மதிய உணவு"



## பங்குனி மாதத்தில் பிறந்த அனைவருக்கும் எமது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1. அம்பலவாணர் நமசிவாயம்
2. எஸ்தகி பற்றிக்
3. பர்னாண்டோ எட்னா
4. ஜெயராஜா ரஞ்சினிதேவி
5. கந்தசாமி விமலாம்பிகை
6. குமாரசாமி மீனலோசனி
7. கதிரவேலு செல்வரத்தினம்
8. மயில்வாகனம் மகேஸ்வரி
9. மரியநாயகம் பிலோமினா
10. முத்துக்குமாரசாமி கருணாகரன்
11. பொன்னம்பலம் ராஜேஸ்வரி
12. சசிநேசன் சூரியகலா
13. சின்னத்தம்பி கோபாலபிள்ளை
14. சிவகுருநாதன் திலகவதி
15. சிவகுரு பாலேந்திரா
16. சங்கரலிங்கம் சத்தியவதி
17. சுப்பிரமணியம் ரஞ்சிதமலர்
18. துரைராஜலிங்கம் சந்திரோதயம்

*ஹார்மணி ஹோல் நிலையத்தின் சேவைகளைப் பற்றியும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் **(Testimonials)** நீங்கள் கூற விரும்பினால், அவற்றை எமக்கு எழுதித் தரவும். அவை எமது மாதாந்த தகவல்களுடன் பிரசுரிக்கப்படும்.

<u>தமிழ் முதியோருடைய வளர்ச்சிக்கு மற்றும் அவர்களுடைய நலனை கருதி, புதிய முதியோர்களை ஹார்மணி ஹோலுக்கு அழைத்து வாருங்கள்! இச்சமயத்தில் 165 தமிழ் முதியோர்கள் அங்கத்தினராக உள்ளார்கள். இன்னும் அனேக தமிழ் முதியோர்கள் இங்கு வந்து மகிழ்ச்சியாய் பங்குபெறவும் பலன் பெற்றுப்போகவும் உதவி செய்வோம்.</u>

# மகளிர் தின சிறப்புக் கவிதை

சர்வதேச மகளிர் தினம்
பங்குனி மாதம் 8ம் திகதி



## மனதில் உறுதி வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்,
காரியத்தி லுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரியகடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்;
ஓம் ஓம் ஓம் ஓம்

## எமது வேலை நாட்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி தொடக்கம் மாலை 4:30 மணிவரை.

மேலதிக தொடர்புகளுக்கு - ஊர்மிலா 416-752-0101 **Ext:230**

## எமது போக்குவரத்து சேவை.

எமது போக்குவரத்து சேவையானது சனிக்கிழமைகளிலும் செயற்படுகின்றது. குறிப்பிட்ட அளவிலான போக்குவரத்துச் சேவையினையே மேற்கொள்ளுகின்றோம். அதிலும் மருத்துவ தேவைகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 416-752-8868

## ❖ இலவச வருமான வரிச்சேவை

இலவச வருமான வரிச்சேவை பங்குனி மாதம் 5ம் திகதியும், 12ம் திகதியும் மாலை 6:00 மணியிலிருந்து 9:00 மணி வரை நடைபெறும். இச்சேவையைப் பெற விரும்புவோர் உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

Ontario
Toronto Central Local Health Integration Network

THE ONTARIO TRILLIUM FOUNDATION LA FONDATION TRILLIUM DE L'ONTARIO

TORONTO

A United Way Member Agency

## அங்கத்துவத்தின் நன்மைகள்

ஹார்மணி ஹோல் முதியோர் நிலையம் சமூக அங்கத்தினரால் உருவாக்கப்பட்டது. இந்த நிலையம் முதியோருக்கு மனோதத்துவ ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சேவைகளை வழங்கிவருகின்றது. நாங்கள் எங்களுடைய சமுதாய நடவடிக்கைகளை எமது சமூகத்திற்கு தொடர்ந்து செயலில் செய்து வருவோம்.
அங்கத்தவராக இருக்கும் தங்களுக்கு நாங்கள் கொடுக்கும் நன்மைகளும் உரிமைகளும்:

- சகல நிகழ்ச்சிகளிலும் பங்குபெறும் வாய்ப்பு
- மற்ற அங்கத்தினருடைய ஆதரவு
- நிகழ்ச்சிகளை சீராக்கும் வாய்ப்புக்கள்
- கருத்தரங்குகளிலும் கலந்துரையடல்களிலும் கலந்துகொள்ளும் வாய்ப்பு
- ஆங்கில, சீன, வங்காள அங்கத்தவர்களுடன் இணைந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றல்
- வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குபெறும் வாய்ப்பு
- சுற்றுலாக்களில் பங்குபற்ற சந்தர்ப்பங்கள்

ஹார்மணி ஹோல் அங்கத்துவம் புரட்டாதி 1ஆம் திகதியிலிருந்து ஆவணி 31 அம் திகதி வரையுள்ள ஒரு வருட காலம் ஆகும்.
தங்கள் அங்கத்துவக் கட்டணம் எங்களுக்கு அச்சு அடிக்கும், செய்தி அனுப்பும், தபால் அனுப்பும் காரியங்களுக்கும் உதவுகிறது.

---

### அன்பளிப்புப் பத்திரம்

பெயர்: ------------------------------------------------------------------------------------------

விலாசம்: ------------------------------------------------------------------------------------------

தொலைபேசி இலக்கம்: -------------------------------------------------------------------

மின் அஞ்சல்: --------------------------------------------------------------------------

அன்பளிப்புத்தொகை: ---------------------------- (தயவுசெய்து காசோலைகளை Call-A-Service Inc. என்ற பெயருக்கு அன்பளிப்பாக செலுத்தவும்)

---

# சேவைகள் / Settlement Services

- உங்கள் தேவைகள் தொடர்பான இடங்களையும் விபரங்களையும் அறியத்தருதல்

- பல்வேறு வகையான சேவைகளுக்கும் திட்டங்களுக்கும் விண்ணப்பித்தல்

- விண்ணப்பப் படிவங்களை நிரப்புதல் (ஓய்வூதியம், வீடு, சுகாதார அட்டை, சமூக காப்புறுதி அட்டை, கடவுச்சீட்டு, குடியுரிமை)

- அரசாங்க வாடகை வீடு எடுப்பது தொடர்பாக உதவி புரிதல்

- பிரச்சனைகளை கண்டுபிடித்தலும் சேவைகள் ஒழுங்குபடுத்தலும்

மேலதிக விபரங்களுக்கு:
**416-752-0101** என்ற இலக்கத்துடன்
தொடர்புகொள்ளவும்.